<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 56/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | முனுசாமி | நாள் | 06.07.2023 |
| தகப்பனார் பெயர் | லட்சுமணக்கவுண்டர் | | |

<u>**1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:–**</u>

1) இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என நான் படித்துப்பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு எண்.15–20A1 தூக்கணாம்பட்டி, மேட்டூர் என்ற முகவரியில் தற்போது நான் வசித்து வரவில்லை என்றால், சரியல்ல. அங்குதான் வசித்து வருகிறேன்.

2) மேற்கண்ட முகவரியில் நான் வசித்து வருவதாக கூறும் நிலையில், இவ்வழக்கில் மேற்படி முகவரிக்குரிய எந்த அடையாள ஆவணத்தையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால், சுண்ணாம்பு கல் தரம் பார்த்து கூறும் தொழில் செய்து வருகிறேன்.

3) நான் சேலம், தமிழ்சங்கம் சாலை, சங்கர் நகரில் தற்போது வசித்து வருகிறேன் என்றால், இல்லை. அங்கு என் மனைவிதான் வசித்து வருகிறார். அது என் மனைவியின் வீடு. நான் அங்கு அடிக்கடி போய் வருவேன். என் அடையாள ஆவணங்கள் அனைத்தும் மேற்படி சங்கர் நகர் முகவரியில் உள்ளதால்தான், நான் அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால், சரியல்ல. சுமார் 45 வருடங்களாக நான் மேற்படி சேலம், சங்கர் நகரில் தான் வசித்து வருகிறேன் என்றாலும், மேட்டூரில் வசித்து வரவில்லை என்றாலும், சரியல்ல.

4) தாவா சொத்திலுள்ள வார்டு எண்கள்.8/30 மற்றும் 8/31 ஆகிய வீடுகளுக்கு 1ம் பிரதிவாதியின் பெயரில் 2009ம் ஆண்டே வரி விதிக்கப்பட்டு 1ம் பிரதிவாதிதான் மேற்படி வீடுகளில் அனுபவத்தில் உள்ளார் என்றால், சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதியின் பெயரில் கடந்த 28.02.2009ம் தேதியில் மேட்டூர் வட்டாட்சியரால் ஒப்படைவு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

5) மேட்டூர் நகராட்சியில் கடந்த 04.04.2008ம் தேதியில் மேற்படி 1ம் பிரதிவாதி பெயருக்கு மேற்படி வீடுகளுக்கு பட்டா வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் அடிப்படையில் தான் மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், மேற்படி பட்டா தவறான ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதால்தான் இவ்வழக்கையே தாக்கல் செய்துள்ளேன்.

6) நான் சொல்வது போல் உண்மையில் நான் தாவா சொத்தில் வசித்து வந்திருந்தால், 2009ம் வருடம் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி குறித்த காலகெடுவிற்குள் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எதுவும் செய்யாமல் சுமார் 8 வருடங்கள் கழித்து தற்போது மேற்படி சொத்தை அபகரிக்கும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.  நான் அந்த சமயத்திலேயே வருவாய்துறை, நகராட்சி மற்றும் சம்பந்தப்பட்ட நபருக்கும் அறிவிப்புகளை அனுப்பினேன்.

7) என் பிரமாண பத்திரிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள வரிவிதிப்பு எண்.13063 ஆனது மேற்படி வரிவிதிப்பிற்குரிய வீடு இடிந்துவிட்டதால், மேற்படி வரி நகராட்சியால் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்றால், சரிதான்.  ஆனால், மேற்படி நீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக நான் நகராட்சியிடம் என் ஆட்சேபனையை தெரிவித்துள்ளேன்.

8) ஆகவே, என் பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளது போல் வரிவிதிப்பு எண்.13063 என்ற எண்ணிற்குரிய கதவு எண்.6/20A1 என்ற எண் கொண்ட வீடே தற்போது இல்லை என்றாலும், பழைய தகவலை வைத்துக்கொண்டு, இவ்வழக்கில் பொய்யான தகவல்களை கூறியுள்ளேன் என்றால், சரியல்ல.

9) அதேபோல் மேற்படி கதவு எண். 6/20A1 என்ற வீட்டிற்குண்டான குடிநீர் இணைப்பு, மற்றும் மின் இணைப்பு SC.170 ஆகியவை நிரந்தரமாக துண்டிக்கப்பட்டுவிட்ட நிலையில் தற்போது அவை உள்ளதாக என் பிரமாண பத்திரிக்கையில் பொய்யான தகவலை கூறியுள்ளேன் என்றால், சரியல்ல.

10) என் சகோதரியின் பெயர் சகுந்தலா என்றால், சரிதான். என் சகோதரிக்கு, காமேஸ்வரன், சித்ரா என இரண்டு வாரிசுகள் உள்ளனர். மேற்படி காமேஸ்வரனின் மனைவிதான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி உஷா ராணி என்றால், சரிதான்.

11) வார்டு எண்கள்.8/30 மற்றும் 8/31 ஆகியவற்றிற்கு ஒட்டியுள்ள இடத்தில் என் மற்றொரு தங்கையான முத்துலட்சுமி என்பவர், தன் கணவரை இழந்த நிலையில், அவரது மகள் அமுதாவுடன் வசித்து வருகிறார் என்றால், முத்துலட்சுமி மட்டும் தான் வசித்து வருகிறார். அமுதா தனியாக வசித்து வருகிறார்.

12) 1ம் பிரதிவாதியின் கணவர் காமேஸ்வரன் மேற்படி கதவு எண்கள்.8/30 மற்றும் 8/31 ஆகியவற்றில் தான் சுமார் 45 வருடங்களாக குடியிருந்து வருகிறார் என்றால், சரியல்ல. மேற்படி தாவா சொத்தில் உள்ள முகவரியில் நான் வசிக்காததால்தான் அங்கு யார் யார் வசித்து வருகிறார்கள் என்ற விவரமே எனக்கு தெரியவில்லை என்றால், சரியல்ல. அங்கு நான்தான் வசித்து வருகிறேன்.

13) நான் சொல்வது போல் உண்மையிலேயே தாவா சொத்தில் வசித்திருந்தால், 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்ட போதே நான் ஆட்சேபித்திருப்பேன் என்றாலும், தற்போது 8 ஆண்டுகளுக்கு பிறகு இவ்வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்து கொண்டு பொய்யாக வழக்கிட்டுள்ளேன் என்றாலும், அதனால், இவ்வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதியின் பெயரில், பட்டா மாற்றப்பட்டு வரிவிதிப்புகள் செய்யப்பட்ட விவரம் எனக்கு தற்போதுதான் தெரிய வந்தது. அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

14) நான் ஒப்படைத்துள்ள வீட்டு வரி ரசீதுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டவை என்பதால், மேற்படி ரத்து செய்யப்பட்ட வீட்டு வரி ரசீதுகளின் அடிப்படையில் நான் எவ்வித உரிமையும் பெற இயலாது என்றால், சரியல்ல.

15) கடந்த 2006ம் வருடத்திலிருந்தே தாவா சொத்திற்குரிய வரிவிதிப்புகள்

அனைத்தும் காமேஸ்வரன், உஷா ராணி மற்றும் எனது மற்றொரு சகோதரியின் பெயரில்தான் உள்ளது என்றாலும், எந்த காலகட்டத்திலும் நான் சுவாதீனத்தில் இல்லை என்றாலும், சரியல்ல. கடந்த 1986ம் வருடத்திலிருந்து நான்தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறேன்.

16) எனக்கு கோவிந்தராஜ் என்ற சகோதரர் இருந்தார் என்றால், சரிதான். மேற்படி கோவிந்தராஜ் மேட்டுர் நகராட்சியில் கணக்காளராக இருந்தார் என்றால், சரிதான். மேற்படி என் சகோதரர் அரசியல் கட்சி பொறுப்பில் இருந்தார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் மேட்டுரிலேயே வசித்து வந்திருந்தால் மேற்படி சங்கதி குறித்து எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், நான் சேலத்தில் வசித்து வந்ததால்தான் நான் தெரியாது என சொல்கிறேன் என்றால், சரியல்ல.

17) என் சகோதரர் கோவிந்தராஜ் மேட்டுர் நகராட்சியில் கணக்காளராக பணியில் இருந்ததால் அவரது உத்தியோகம் மற்றும் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி என் பெயரில் ஒரு சில ரசீதுகள் மட்டும் பெற்று அதை இவ்வழக்கில் ஆவணங்களாக ஒப்படைத்துள்ளேன் என்றால், சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.